IT&ID | e-gov | PID
CH | ELCOT 24 JUL 2008 3295 | MD
HR | ACCTS | SECTL | OTHERS


**சுருக்கம்**

நிலம்—நிலஉரிமை மாற்றம்— கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம்—விஸ்வநாதபுரம் மற்றும் காளஹஸ்திபுரம் கிராமம் புல எண்.3/2, 3/6 மற்றும் 3/10 ஆகியவற்றில் விஸ்தீரணம் 0.92.5 எக்டேர் அல்லது 2.28 ஏக்கர் நிலத்தில் தொழில் நுட்ப பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

**வருவாய்த்(நி.மு.7)துறை**

**அரசாணை (நிலை) எண்:419** **நாள்:7.7.08**

**படிக்கவும்:**

1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கடித எண். ந.க.எச்1 /35522/06, நாள் 11.06.
2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண்.பி2/37377/06, நாள். 11.12.06 மற்றும் 31.12.07.

****

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், விஸ்வநாதபுரம் மற்றும் காளஹஸ்திபுரம் கிராமம் புல எண். 3/2, 3/6 மற்றும் 3/10 ஆகியவற்றில் விஸ்தீரணம் 0.92.5 எக்டேர் அல்லது 2.28 ஏக்கர் நிலத்தில் தொழில் நுட்ப பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்வது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்.

i) ஓசூர் வட்டம் காளஹஸ்திபுரம் தரப்பு விஸ்வநாதபுரம் கிராமத்தில் கீழ்க்கண்ட அரசு புறம்போக்கு நிலங்கள் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க தேவைப்படுவதாக கோரப்பட்டுள்ளது.

| புல எண் | பாகுபாடு | மொத்த விஸ்தீரணம் | பராதீனம் செய்யும் பரப்பு |
|---|---|---|---|
| 1/2 | அனாதீனம் | 0.77.5 | 0.77.5 |
| 1/3 | அனாதீனம் | 0.23.5 | 0.23.5 |
| 1/4 | அனாதீனம் | 0.22.0 | 0.22.0 |
| 2/1 | அனாதீனம் | 0.29.5 | 0.29.5 |
| 2/7 | அனாதீனம் | 0.15.5 | 0.15.5 |
| 2/8 | அனாதீனம் | 0.11.5 | 0.11.5 |
| 2/9 | அனாதீனம் | 0.13.0 | 0.13.0 |
| 3/1 | மேய்ச்சல் தரை | 43.01.0 | 43.01.0 |
| 3/2 | ஏரிக்கரை | 0.36.5 | 0.36.5 |
| 3/3 | அனாதீனம் | 0.03.0 | 0.03.0 |
| 3/6 | வாரி | 0.16.5 | 0.16.5 |
| 3/8 | அனாதீனம் | 0.05.5 | 0.05.5 |
| 3/9 | மேய்ச்சல் தரை | 24.69.5 | 24.69.5 |
| 3/10 | வாரி | 0.39.5 | 0.39.5 |
| | மொத்தம் | 70.64.0 | 70.64.0 |

(ii) மேற்குறிப்பிட்டபட்ட புலங்களில் புல எண்கள் 3/2ல் 0.36.5ஹெக்டேர் நிலமும் (ஏரிக்கரை), புல எண். 3/6ல் மற்றும் 3/10ல் முறையே 0.16.5 மற்றும் 0.39.5ஹெக்டேர் நிலங்கள் வாரி புறம்போக்கு நிலமும் பராதீனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலங்கள் பொதுப்பணித்துறையின் சம்மதம் பெற்று, பின்னரே பராதீனம் செய்ய இயலும். இதற்காக சம்மதக்கடிதம் கோரி ஓசூர் வட்டாட்சியரால் பொதுப்பணித்துறையினருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த புலங்கள் தொழில்நுட்ப பூங்கா அமைக்க தகுதியான நிலங்களாக இருப்பதால் முழுநிலமும் பராதீனம் செய்ய உள்ளது. மேலும் பிரஸ்தாப புலங்கள் 0.92.5 ஹெக்டேர் நிலம் முழுவதும் பராதீனம் செய்யப்படும் 70.64.0 ஹெக்டேரில் உட்பட்டு வருவதால் அவைகளை நீக்கம் செய்ய இயலாது;

(iii) ஓசூர் வட்டம், காளஹஸ்திபுரம் தரப்பு, விஸ்வநாதபுரம் கிராம புல எண்.3/2, 3/6, 3/10 ஆகிய வாரி, ஏரிக்கரை புறம்போக்கு நிலங்களை தொழில்நுட்ப பூங்கா அமைக்க எல்காட் மேலாண்மை இயக்குநர் பெயரில் நிலம் பராதீனம் செய்ய ஆட்சேபணைகள் இருப்பின் தெரிவிக்க விஸ்வநாதபுரம் கிராமத்தில் 30.09.2006 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி உத்தேச மாறுதலுக்கு நாளது வரை பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. ஓசூர் வட்டம், காளஹஸ்திபுரம் தரப்பு விஸ்வநாதபுரம் கிராம புல எண்கள் 3/2, 3/6,3/10 ஆகிய வாரி ஏரிக்கரை புறம்போக்கு நிலங்களை எல்காட் மேலாண்மை இயக்குநர் பெயரில் பராதீனம் செய்ய தற்போது புதிய ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுள்ளதால் அவர்களிடமிருந்து ஊராட்சி மன்ற தீர்மானம் பெற்று பின்னர் அனுப்பி வைப்பதாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். ஓசூர் வட்டம், காளஹஸ்திபுரம் தரப்பு விஸ்வநாதபுரம் கிராம புல எண் 3/2, 3/6, 3/10 ஆகிய வாரி ஏரிக்கரை புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை;

(iv) நிலம் பராதீனம் செய்யப்படும் புலன்களில் மரங்கள், கிணறு, கட்டிடங்கள், கோயில், சர்ச், மசூதி, புராதனச் சின்னங்கள், புதை குழிகள் போன்ற நிலையான தடைகள் ஏதுமில்லை. மேற்படி நிலம் பராதீனம் செய்வதால் தனி மனித உரிமைகள் ஏதும் பாதிக்கப்படுவதில்லை. மேற்கண்ட புலங்கள் தடையாணை புத்தகத்தில் பதியப்பட்ட நிலங்கள் அல்ல. மேற்கண்ட புலங்கள் யாவும் ஆதிதிராவிடர் நிபந்தனைக்குட்பட்ட நிலங்கள் அல்ல. இக்கிராமத்தில் போதுமான அளவு சமுதாய புறம்போக்கு நிலங்கள் உள்ளன. மேற்படி புலங்கள் நிலவகை மாற்றம் செய்வதால் பொதுமக்கள் நலன் எந்தவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. நிலப்பராதீனம் செய்ய உத்தேசிக்கப்பட்ட புலங்களையும் மாதிரி நிலத்தையும் 31.8.2006 அன்று மாவட்ட ஆட்சித்தலைவரால் தணிக்கை செய்யப்பட்டுள்ளது;

(v) ஓசூர் வட்டம், காளஹஸ்திபுரம் தரப்பு–விஸ்வநாதபுரம் கிராம புல எண். 3/2, 3/6, 3/10 ஆகிய மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்களுக்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்ய காளஹஸ்திபுரம் கிராமத்தில் நடைபெற்ற விற்பனை புள்ளி விபரங்கள்1.7.2005 முதல் 31.10.2006 வரையிலானவை ஓசூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சேகரிக்கப்பட்டது. மேற்படி ஓராண்டு காலத்தில் 29 விற்பனைகள் நிகழ்ந்துள்ளன, கையகப்படுத்தப்படும் நிலங்களின் விலை மதிப்பை நிர்ணயம் செய்ய மாதிரி நிலங்கள் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி 29 விற்பனைகளில் கீழ்க்கண்டவைகள் அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வ.எண்கள். 5,6,7,8,9,10,14,15,16,17,18,19,27 மற்றும் 28,29 அதிக மதிப்பு உள்ளது தள்ளுபடி.
வ.எண்கள். 1,2,3,11,12,13,21,22,23, மற்றும் 24 மதிப்பு மிக குறைவு தள்ளுபடி.
வ.எண்கள். 4 மற்றும் 20 வீட்டுமனைகளாக விற்பனை தள்ளுபடி.
வ.எண்கள். 25 மற்றும் 26 தேர்வு செய்யப்பட்டது;

(vi) நில மாறுதல் செய்யப்பட உள்ள 0.92.5 ஹெக்டேர் நிலத்திற்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்ய மாதிரி நிலமாக விஸ்வநாதபுரம் கிராமம் புல எண். 41 விஸ்தீரணம் 1.78 ஏக்கர் நிலம் ஒசூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண் 5139/06 நாள் 26.4.06ன் படி ரூ.1,78,000/—க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஏக்கர் ஒன்றின் மதிப்பு ரூ.1,00,000/— ஆகிறது. இந்த நிலம், நிலப்பரிவர்த்தனை செய்யப்படும் நிலங்களுக்கு அருகாமையிலும், மண்வளம், தரம், தீர்வை ஆகியன நிலப் பரிவர்த்தனை செய்யப்படும் நிலங்களுக்கு குறைவானதாகவும் உள்ளதால் இதனையே மாதிரி நிலமாக தேர்வு செய்யப்பட்டது. இதன் மதிப்பையே கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு மதிப்பிடலாம்.

| | |
|---|---|
| 1. நிலமதிப்பு ஒரு ஏக்கர் மதிப்பு (பத்திர எண்.5139/06 நாள் 26.4.06) | ரூ.1,00,000/— |
| 2. ஒரு ஹெக்டேர் மதிப்பு | ரூ.2,47,000/— |
| 3. இதன்படி பராதீனம் செய்யப்பட உள்ள 0.92.5 ஹெக்டேர் மதிப்பு | ரூ.2,28,475/— |
| 4. ஆக மொத்தம் | ரூ.2,28,475/— |

மேற்படி புலங்கள், புதிய தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க பராதீனம் செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் நிலமதிப்பு தொகையினை வசூலித்துக்கொண்டு மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனத்திற்கு பராதீனம் செய்யலாம். நீர்நிலைப்புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம்/ நிலப்பராதீனம் செய்வது இவ்வினத்தில் தவிர்க்க இயலாது என்பதை பரிசீலித்து அரசு கடித எண். 39388/நி.மு.4(1)/04—3 வருவாய்த்துறை, நாள் 26.11.2004ஐ விலக்களிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அறிக்கையினை மேலனுப்புகையில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(அ) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் எல்காட் நிறுவனத்திற்கு விஸ்வநாதபுரம் , காளஸ்திபுரம் கிராமம், ஒசூர் வட்டம் புல எண்,3/2, 3/6 மற்றும் 3/10 முதலியவற்றில் 0.92.5 எக்டேர் அல்லது 2.28 ஏக்கர் நிலம் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க கருத்துரு அனுப்பியுள்ளார்.

<u>முன்மொழிவு செய்யப்பட்ட புலங்கள் பின்வருமாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.</u>

| வ.எண் | புல.எண் | விஸ்தீரணம் | வகைப்பாடு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 3/2 | 0. 36.5 | ஏரிகரை | நிலம் |
| 2 | 3/6 | 0. 16.5 | வாரி | பொதுப்பணித்துறையை சார்ந்தது |
| 3 | 3/10 | 0.39.5 | வாரி | |
| | | 0.92.5 எக்டேர் அல்லது 2.28 ஏக்கர் | | |

(ஆ) முன்மொழியப்பட்ட புலங்களில் ஆக்ரமணங்கள், சின்னங்கள், மதசார்பு கட்டிடங்கள், கட்டிடங்கள், மரங்கள், மின் அமைப்புகள் மற்றும் தொல்லியல் துறை சம்பந்தமான நினைவு சின்னங்கள் ஏதுமில்லை;

(இ) இக்கிராமங்கள் அ1 விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டு ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை;

(ஈ) நிலம் ஏரிக்கரை மற்றும் வாரிபுறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,00,000/—(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) என விற்கிரய அடிப்படையில் முன் மொழியப்பட்ட நிலஉரிமை மாற்ற நிலங்களின் மதிப்பு ரூ.2,28,475/— ஆகின்றது வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஒரு ஏக்கர் 24,500/— என்றும் கூறியுள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி அவர்களின் அறிக்கையினை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், விஸ்வநாதபுரம் மற்றும் காளஹஸ்திபுரம் கிராமம் புல எண்கள் 3/2, 3/6 மற்றும் 3/10 முதலியவற்றில் 0.92.5 எக்டேர் அல்லது 2.28 ஏக்கர் எல்காட் நிறுவனத்திற்கு ஒருமடங்கு நிலக்கிரயமாக ரூ.2,28,474/— (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நானூற்று எழுபத்து நான்கு மட்டும்) வசூலித்துக் கொண்டு வருவாய் நிலை ஆணை எண் 24 (6) இன் கீழ் உள்ள நிபந்தனைகட்குட்பட்டு நிலஉரிமை மாற்றம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார். அரசாணை (நிலை) எண் 35 தகவல் தொழில் நுட்பத் துறை நாள் 29.10.1999—இல் தொழில் நுட்ப பூங்கா அமைக்கும் கருத்துருக்களில் எல்காட் நிறுவனத்திற்கு ஒரு மடங்கு சந்தை மதிப்பினை நிலக்கிரயமாகப் பெற்று நில உரிமை மாற்றம் செய்யலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 6.12.06 அன்று தலைமைச்செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோயம்புத்தூர் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதற்கு எல்காட் நிறுவனத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்த நிலத்திற்கு அரசு நிர்ணயம் செய்த (ஒரு மடங்கு சந்தை மதிப்பு ) நில மதிப்பினை மாற்றி அமைக்க தேவையில்லை என தலைமைச் செயலாளர் அறிவுரை வழங்கினார். எனவே இந்நேர்விலும் நிலமதிப்பாக ஒரு மடங்கு சந்தை மதிப்பினை நிலக்கிரயமாக நிர்ணயம் செய்யலாம் என கருதப்படுகிறது.

4. தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை அவர்களது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

(1) எழுவப்பள்ளி (அல்லது) உளிமாவு ஏரிக்கும், அதன் கரைகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்;

(2) உபரி நீர் செல்லும் வாரி வாய்க்காலின்(Surplus Course) தற்போதைய அகலமான 10மீ அகலத்திற்கு வாய்க்காலில் எவ்வித தடையும் ஏற்படுத்தக் கூடாது. அதன் இயற்கை நிலை அப்படியே இருக்கும்படி பாதுகாக்கப்பட வேண்டும். மழைக்காலங்களில் நீர் சரளமாக செல்லும் வகையில் தடையில்லாமல் இருக்க வேண்டும்;

(3) வாரி புறம்போக்கில், ஏதேனும் நிரந்தர கட்டிடங்களோ அல்லது தடைகளோ செய்ய முற்படின், இந்த நிலஉரிமை மாற்றம் செய்ததை உடன் நீக்கம் செய்ய அரசுக்கு பரிந்துரைக்கப்படும்;

(4) பிற்காலங்களில், நீர் ஆதார அமைப்புகளுக்கு ஏதேனும் அரசு விதிமுறைகளில் மாற்றம் செய்யப்படின், அதற்கு ஏற்றார்போல் அமைத்துத்தர மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பப்பூங்கா நிர்வாகம் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

5. மேற்கண்ட சூழ்நிலையில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோரது அறிக்கைகளை நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது;

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், விஸ்வநாதபுரம் மற்றும் காளஹஸ்திபுரம் கிராமம் புல எண்.3/2, 3/6 மற்றும் 3/10 சிலவற்றில் விஸ்தீரணம் 0.92.5 எக்டேர் அல்லது 2.28 ஏக்கர் ஏரிக்கரை மற்றும் வாரி என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்யும் நாளில் நிலவும் ஒரு மடங்கு சந்தை மதிப்பினை வசூலித்துக்கொண்டு தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கும் பொருட்டு வருவாய்

நிலை ஆணை எண் 24 (6)–இன் கீழ் வழக்கமான நிபந்தனைகளுடன், கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகளுடன் "எல்காட்" நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம்;

(ஆ) நிலம், எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகிறதோ அதற்காக மட்டுமே நிலத்தை பயன்படுத்தவேண்டும்;

(இ) பிரஸ்தாப புலமோ அல்லது ஒரு பகுதியோ தேவையில்லையெனில் அதை வருவாய்த்துறைக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டும்;

(ஈ) கல்கிரயம், மரக்கிரயம் மற்றும் உட்பிரிவு கட்டணம் ஆகியவற்றைக் கேட்பு நிறுவனம் செலுத்த வேண்டும் மற்றும்;

(உ) ஊராட்சி ஒன்றிய தடையின்மை சான்று நாளது தேதியில் பெறப்படல் வேண்டும்;

(ஊ) நில உரிமை மாற்றம் குறித்து ஆவணங்களில் வகைப்பாடுமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

(i) எழுவப்பள்ளி (அல்லது) உளிமாவு ஏரிக்கும், அதன் கரைகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்;

(ii) உபரி நீர் செல்லும் வாரி வாய்க்காலின்(Surplus Course) தற்போதைய அகலமான 10மீ அகலத்திற்கு வாய்க்காலில் எவ்வித தடையும் ஏற்படுத்தக் கூடாது. அதன் இயற்கை நிலை உள்ளபடியே இருக்கும்படி பாதுகாக்கப்பட வேண்டும். மழைக்காலங்களில் நீர் சரளமாக செல்லும் வகையில் தடையில்லாமல் இருக்க வேண்டும்;

(iii) வாரி புறம்போக்கில், ஏதேனும் நிரந்தர கட்டிடங்களோ அல்லது தடைகளோ செய்ய முற்படின், இந்த நிலஉரிமை மாற்றம் செய்ததை உடன் நீக்கம் செய்ய அரசுக்கு பரிந்துரைக்கவேண்டும்.

(iv) பிற்காலங்களில், நீர் ஆதார அமைப்புகளுக்கு ஏதேனும் அரசு விதிமுறைகளில் மாற்றம் செய்யப்படின், அதற்கு ஏற்றார்போல் அமைத்துத்தர மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பப்பூங்கா நிர்வாகம் முழுபொறுப்பு ஏற்கவேண்டும்.

6. மேலே பத்தி 5 இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர்நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அம்புஜ் சர்மா
அரசு செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி.
தலைமைப்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) சென்னை–5
மேலாண்மை இயக்குநர், எல்காட், சென்னை–35

நகல்:
செயலர், தகவல் தொழில் நுட்பவியல் துறை, சென்னை—9
செயலர், பொதுப்பணித்துறை, சென்னை—9
செயலர்,தொழில்துறை, சென்னை—9
செயலர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை—9
செயலர், ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை—9
செயலர், நிதித்துறை, சென்னை—9
செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—9
அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9
அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9
செயலர் வருவாய்த்துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9
துணை செயலாளர் (நி.மு.) அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை—9
இருப்பு கோப்பு/ உதிரி கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

12/7/08